www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

VNR11Com

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2024

-----

# வகுப்பு 11

## வணிகவியல்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள்: 90

பகுதி - I

20×1=20

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) பாண்டியர் ஆட்சிக் காலத்தில் பொருட்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு ............ என்று பெயர்.
அ) அங்காடி ஆ) சந்தை இ) நாளங்காடி ஈ) அல்லங்காடி

2) கீழ்க்கண்டவற்றில் எது பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகளின் அடிப்படையில் வருகின்றது?
அ) வழக்கறிஞர் தன் பணி செய்வது
ஆ) மருத்துவர் ஆலோசனைக் கட்டணம் வசூலித்தல்
இ) பழ வியாபாரி பழங்களை விற்பது
ஈ) கோவிலுக்குச் செல்வது

3) அரசு நிறுமத்தின் பங்கு முதலீடு .........க்குக் குறையாமல் அரசு பெற்றிருக்க வேண்டும்.
அ) 60% ஆ) 75% இ) 95% ஈ) 51%

4) கீழ்க்கண்டவற்றில் எது, "ஒரு நபர் ஒரு வாக்கு" என்ற கோட்பாட்டில் இயங்கி வருகின்றது?
அ) கூட்டாண்மை ஆ) அரசு நிறுமங்கள்
இ) கூட்டுப்பங்கு நிறுமம் ஈ) கூட்டுறவு சங்கம்

5) கூட்டாண்மை உண்டாக்கப்படுவது
அ) ஒப்பந்தத்தால் ஆ) கூட்டாளிகளிடையே உறவு
இ) அரசின் வழிகாட்டல் ஈ) நட்பின் அடிப்படையில்

6) ரூபே அட்டை சேவைகள் இந்தியாவில் எப்போது தொடங்கப்பட்டது?
அ) மார்ச் 2014 ஆ) மார்ச் 2013 இ) மார்ச் 2010 ஈ) மார்ச் 2012

7) புகையிலை, பருத்தி போன்ற பொருட்களை பாதுகாப்பாக வைக்க பயன்படும் பண்டக காப்பகம்
அ) தட்பவெப்பநிலை கட்டுப்பாட்டு பண்டக காப்பகம்
ஆ) பொதுவான பண்டக காப்பகம்
இ) குளிர்பதன பண்டக காப்பகம் ஈ) சிறப்புப்பொருள் பண்டக காப்பகம்

8) காப்பீட்டின் அடிப்படைக் கோட்பாடு ........... ஆகும்.
அ) பகர உரிமை ஆ) மிக்க நம்பிக்கை இ) அண்மை காரணம் ஈ) கூட்டுறவு

9) புற ஒப்படைப்பின் முக்கிய நன்மை ............
அ) அலகுகள் ஆ) உற்பத்தித்திறன் இ) செலவு குறைப்பு ஈ) திறன்

10) நெறிமுறைகளுக்கான தேவைகள்
அ) மேலாண்மையில் இல்லாத தொழிலாளர்கள் ஆ) உயர்மட்ட மேலாண்மை
இ) நடுத்தர அளவிலான மேலாளர்கள் ஈ) மேற்கண்ட அனைத்தும்

11) கடன் பத்திரதாரர்கள் ஒரு நிலையான ............ விகிதம் பெறத் தகுதியுடையவர்கள்.
அ) பங்காதாயம் ஆ) இலாபம் இ) வட்டி ஈ) விகிதம்

12) முத்ரா வங்கி எவ்வகை நிறுவனங்களுக்கு கடன் வழங்குகிறது?
அ) குறு நிறுவனங்கள் ஆ) சிறு நிறுவனங்கள்
இ) நடுத்தர நிறுவனங்கள் ஈ) மேற்கூறிய அனைத்தும்

13) உள்நாட்டு வியாபாரத்தின் நோக்கம் ............
அ) தேசிய வருமானத்தை உயர்த்துவது ஆ) வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது
இ) அனைத்துப் பொருட்களையும் கிடைக்கச் செய்வது
ஈ) அத்தியாவசியப் பொருட்களையும், சேவைகளையும் சிக்கன விலையில் வழங்குவது

14) வியாபார இடைநிலையர்களை ............ வகைகளாகப் பிரிக்கலாம்.
அ) ஐந்து ஆ) மூன்று இ) நான்கு ஈ) இரண்டு

15) ஏற்றுமதியாளரால் சுங்க நடைமுறைகளைப் பின்பற்ற நியமிக்கப்படும் முகவர் ............
அ) அகற்றீட்டு முகவர் ஆ) அனுப்புகை முகவர்
இ) கழிவு முகவர் ஈ) தன் பொறுப்பு முகவர்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

16) உலக வர்த்தக அமைப்பு உருவாக்கப்பட்ட நாள் ............
அ) 1-1-1996 ஆ) 1-1-1997 இ) 1-1-1995 ஈ) 1-1-1994

17) இந்திய ஒப்பந்தச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு
அ) 1873 ஆ) 1871 இ) 1874 ஈ) 1872

18) ஒரு நபர் மற்றொரு நபருக்கு செய்ய வேண்டிய மறுபயன் உருவாக்கும் ஒவ்வொரு உறுதிமொழியும், உறுதிமொழிகளின் தொகுதியும் ............ எனப்படும்.
அ) உடன்பாடு ஆ) ஒப்பந்தம் இ) முனைவு ஈ) ஏற்பு

19) இந்தியாவில் வேளாண்மை வருமானம் என்பது
அ) வருமானமாக கருதப்படுவதில்லை ஆ) முழுவதும் வரி விதிப்பிற்கு உட்பட்டது
இ) மறைமுக வரி ஈ) முழுவதும் வரி விலக்கிற்கு உட்பட்டது

20) சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறை இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்பட்ட நாள்
அ) ஜூலை 1, 2017 ஆ) மார்ச் 1, 2017 இ) ஏப்ரல் 1, 2017 ஈ) சனவரி 1, 2017

## பகுதி - II

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **7×2=14**
**வினா எண் 30க்கு கட்டாயம் பதில் அளிக்க வேண்டும்.**

21) பண்டமாற்றுமுறை என்றால் என்ன?
22) இந்துச் சட்டத்தின் இரண்டு பிரிவுகள் யாவை?
23) சிறப்பு பண்டகசாலைகள் என்றால் என்ன?
24) தனி உரிமம் பெற்றவர் என்பவர் யார்?
25) குறு நிறுவனங்களுக்கு சில எடுத்துக்காட்டுகள் தருக.
26) மறு ஏற்றுமதி வியாபாரம் என்றால் என்ன?
27) உலக வங்கி என்பதன் பொருள் யாது?
28) ஒப்பந்தத்தை வரையறுக்கவும்.
29) மாநில சரக்கு மற்றும் சேவை வரி பற்றி குறிப்பு வரைக.
30) கடனீந்தோர் ஒருவர் கடனாளியின் மீது காப்பீடு எடுப்பது எந்த கோட்பாட்டின் அடிப்படையில் விளக்குக?

## பகுதி - III

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **7×3=21**
**வினா எண் 40க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.**

31) சிறுகுறிப்பு வரைக: (அ) தொழில் (ஆ) சிறப்புத்தொழில்
32) வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
33) பண்டக காப்பாளர் இரசீதிலிருந்து, பண்டக சான்றாணை - வேறுபடுத்துக.
34) சமூகப் பொறுப்புணர்வின் வகைகளை வரிசைப்படுத்துக.
35) சுய உதவிக் குழுக்களின் ஏதேனும் மூன்று சிறப்பியல்புகளை விவரிக்கவும்.
36) சிறப்பங்காடியின் சிறப்பியல்புகளை விளக்குக. (ஏதேனும் 3)
37) கப்பல் இரசீதிற்கும், கப்பல் வாடகை முறிவுக்கும் உள்ள வேறுபாடு தருக.
38) ஒப்பந்த நிறைவேற்றத்தை யார் கோரலாம்?
39) ஐவகை வருமானத் தலைப்புகளை வரிசைப்படுத்துக.
40) அரசு நிறுமம் என்றால் என்ன?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **7×5=35**

41) அ) வணிகத்தின் தடைகள் ஏதேனும் ஐந்தினை விளக்குக. **(அல்லது)**
ஆ) இந்திய ரிசர்வ் வங்கியின் தலைமை மற்றும் மேற்பார்வை பணிகளை விவரிக்கவும்.

42) அ) தனியாள் வணிகத்தின் நன்மைகள் ஏதேனும் ஐந்தினை விவரிக்கவும். **(அல்லது)**
ஆ) ஏட்டுக்கடன் முகமையின் சிறப்பம்சங்களை தெளிவுபடுத்துக.

43) அ) அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? **(அல்லது)**
ஆ) கூட்டுறவின் கொள்கைகள் யாவை?

44) அ) ஏதேனும் ஐந்து தனிநபர் முதலீட்டு வழிகளை விளக்குக. **(அல்லது)**
ஆ) சட்டப்படி செல்லக்கூடிய ஒப்பந்தம் ஒன்றின் இன்றியமையாத கூறுகள் யாவை?

45) அ) சமூகப் பொறுப்புணர்வை எவ்வாறு நீங்கள் வகைப்படுத்துவீர்கள்? **(அல்லது)**
ஆ) செலுத்தல் சமநிலையின் சிறப்பம்சங்கள் யாவை?

46) அ) நேரடி வரி, மறைமுக வரி - வேறுபடுத்துக. **(அல்லது)**
ஆ) உள்நாட்டு வணிகம், பன்னாட்டு வணிகம் - வேறுபடுத்துக.

47) அ) சுய உதவிக் குழுவின் நோக்கங்கள் ஏதேனும் ஐந்து எழுதுக. **(அல்லது)**
ஆ) காப்பீட்டின் கோட்பாடுகள் எவையேனும் ஐந்தினை விவரிக்கவும்.

----------

www.Padasalai.Net